இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 03.07.2026

# விஜய் ஆசீர்வதிக்கும் விஜயபாஸ்கர்கள்!

“அரசாங்கப் பணத்தை தொட மாட்டேன். தொட்டால் விட மாட்டேன். இதுக்கு முன்னாடி தொட்டவங்களையும் விட மாட்டேன்” என்பது ‘தூய சக்தி’ விஜய்யின் பொய்வேட கப்சாக்களில் ஒன்றாகும். அந்த தூய சக்தி, கட்சி ஆரம்பித்த இரண்டு ஆண்டு காலத்தில் செலவழித்த தொகை எவ்வளவு, அதைச் செலவு செய்தவர்கள் யார் என்பதைச் சொல்ல முன் வருவாரா?

விஜய்க்கு ஏற்கனவே ‘வரி கட்டாத புலி’ என்றுதான் பெயர். **‘புலி’ திரைப்படத்துக்காக பெற்ற வருமானத்தில், ரூ.15 கோடியைக் கணக்கில் காட்டாமல் மறைத்ததை வருமான வரித்துறை ஆதாரங்களுடன் கண்டுபிடித்தது. இந்த அப்பட்டமான வரி ஏய்ப்பிற்காக ரூ.1.5 கோடி அபராதம் (Penalty) விதிக்கப்பட்டது. இந்த அபராதத்தில் இருந்து தப்பிக்க சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார் விஜய். கடந்த பிப்ரவரி 6 அன்று உயர் நீதிமன்றம் விஜய் மனுவைத் தள்ளுபடி செய்தது. ‘வரி ஏய்ப்பு செய்தது உண்மைதான், அபராதத்தைச் செலுத்தியே தீர வேண்டும்’** என்று அதிரடித் தீர்ப்பளித்தது.

ஏற்கனவே வெளிநாட்டு இறக்குமதி காருக்கு வரிக் கட்டாத வழக்கும் அவர் மீது உண்டு. **“நடிகர்கள் நிஜ வாழ்க்கையிலும் ஹீரோக்களாக இருக்க வேண்டும், வரி ஏய்ப்பவர்களாக இருக்கக் கூடாது”** என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியால் கண்டிக்கப்பட்டவர்தான் அவர்.

கடந்த நாற்பது நாட்களாக நடந்து கொண்டிருக்கும் குதிரை பேரத்துக்கு விலை என்ன என்பதை நாடு அறியும். இவை போதாது என்று அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை பதவி விலக வைத்து வருகிறார் ‘துர் நாற்ற சக்தி’ விஜய். அவரால் பதவி நீக்கம் செய்யப்பட்டு த.வெ.க.வில் சேர்த்துக் கொள்ளப்படுகிறவர்கள் அனைவரும் துர் நாற்ற சக்திகள் தான் என்பதை மக்கள் அறிவார்கள்.

விராலிமலை விஜயபாஸ்கருக்கு ‘குட்கா விஜயபாஸ்கர்’ என்று தான் பெயர். சென்னையில் சட்டவிரோதமாகத் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை விற்பனை செய்ய அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், ஐ.பி.எஸ். அதிகாரிகள், வணிக வரித்துறை அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு லஞ்சம் தரப்பட்டதாக 2017ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் குற்றச்சாட்டு எழுந்தது. குட்கா வியாபாரிகளிடம் வருமான வரித்துறை விசாரணை நடத்துகிறது. அப்போது தங்களது வியாபாரத்துக்கு துணை நின்றவர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் யார் யார் என்பதை டைரி எழுதி வைத்திருந்தார்கள் வியாபாரிகள்.

இது தொடர்பான வழக்கில் மத்திய கலால் வரித்துறை தாக்கல் செய்த பதிலில், “டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஏராளமான குட்கா பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை விற்பதற்காக ரூ.55 கோடி வரை ஹவாலா முறையில் பணப்பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது” என்று கூறப்பட்டு இருந்தது. வருமான வரித்துறையும் இதனை வலிமைப்படுத்துவது மாதிரியான ஆதாரங்களைக் கொடுத்தது. தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, அப்துல் குத்தூஸ் அமர்வு, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது.

**ரூ.40 கோடிக்கு மேல் லஞ்சம் பெற்றது தொடர்பாக வருமான வரித்துறை அ.தி.மு.க. ஆட்சியில் தலைமைச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியது. அதில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்து அமைச்சரான விஜயபாஸ்கர், இரு டி.ஜி.பி.க்கள் பெயர்கள் இருந்தன. விஜயபாஸ்கர் லஞ்சம் பெற்றதற்கான ஆதாரங்கள் கொண்ட ஒரு கோப்பு ஒன்றை வருமான வரித்துறை அனுப்பி இருந்தது. அவரைத் தான் எம்.எல்.ஏ. பதவி விலக வைத்து த.வெ.க.வில் இணைத்துக் கொள்கிறார் துர்நாற்ற சக்தி விஜய்.**

டாக்டர் விஜயபாஸ்கர் மீது வருமானத்துக்கு அதிகமாக 35.79 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாக புதுக்கோட்டை நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். (2023 மே. 22) வழக்கு நடந்து கொண்டு இருக்கிறது. இவரைத் தான் சேர்த்துக் கொள்கிறார் துர்நாற்ற சக்தி விஜய்.

**கரூர் எம்.ஆர். விஜயபாஸ்கர், போலிப் பத்திரம் தயாரித்து போலீசுக்கு பயந்து தலைமறைவாக இருந்தவர். வேறு ஒருவருக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான நிலத்துக்கு போலிப் பத்திரம் தயாரித்ததாக குற்றம் சாட்டப்பட்டவர். இது தொடர்பாக குற்றச்சாட்டு பதிவானதும் கரூர் நீதிமன்றத்தில் முன் ஜாமீன் கேட்டார் அவர். நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. உடனே தலைமறைவு ஆனார். கேரளாவில் பதுங்கி இருந்த அவரை தமிழ்நாடு சி.பி.சி.ஐ.டி. போலீஸார் கைது செய்து இழுத்து வந்தார்கள். திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். இது தொடர்பாக வருமான வரித்துறையும் தனியாக ஒரு வழக்கை பதிவு செய்துள்ளது.**

இதெல்லாம் அவர் அரசியலுக்கு நுழைந்த காலத்தில், அமைச்சர் ஆவதற்கு முன்பு நடந்தது அல்ல. அமைச்சராக இருந்த பிறகு நடந்தவை ஆகும். 2024 ஜூலை மாதத்தில் நடந்தவை ஆகும். இந்த யோக்கிய சிகாமணியையும் இணைத்துக் கொள்ள இருக்கிறார் துர்நாற்ற சக்தி விஜய்.

**முதலமைச்சர் விஜய்க்கு ஊழலைப் பற்றி பேசுவதற்கு யோக்கியதை இருக்கிறதா?**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.7.2026) தமது இல்லத்தில் சென்னை அண்ணாநகர் எஸ்.வெங்கடேசன் – திருமதி வெ. யோகவள்ளி இணையரின் புதல்வர் வழக்கறிஞர் ஸ்ரீதர், மாங்காடு தனஞ்செழியன் – திருமதி த.சித்ரா இணையரின் புதல்வி த. துர்கா தேவி ஆகியோரின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இதில் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் மணமக்களின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

### சமாஜ்வாதி கட்சி

# தேசியத் தலைவர் அகிலேஷ் யாதவ் பிறந்தநாள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 3-

“நாம் கொண்டுள்ள கொள்கை நட்பால், எல்லா சவால்களையும் வெல்வோம்” என்று சமாஜ்வாதி கட்சியின் தேசியத் தலைவர் அகிலேஷ் யாதவ் பிறந்தநாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

சமாஜ்வாதி கட்சி தேசிய தலைவர் அகிலேஷ் யாதவ் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.



ஓர் அரசியல் இயக்கத்தின் உண்மையான வலிமை என்பது தேர்தல் வெற்றிகளில் மட்டுமல்ல, தனது அடிப்படையான கொள்கைகளைத் தலைமுறைகளைத் தாண்டி கடத்துவதில் தான் இருக்கிறது. சமூகநீதி, மக்களாட்சி, கூட்டாட்சி விழுமியங்களை நோக்கிய பயணத்தில் எதிர்கொள்ளும் எல்லா சவால்களையும் வெல்ல நாம் கொண்டுள்ள கொள்கை நட்பு நமது உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தட்டும்.

இம்முயற்சியில் தாங்கள் தொடர்ந்து வெற்றி பெறவும், நீண்ட நாட்கள் நல்ல உடல்நலத்தோடும், மகிழ்ச்சியோடும், மக்கள் பணியில் மேலும் பல்லாண்டுகள் சிறந்திடவும் விழைகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர்

# துறைமுகம் காஜா இல்லத் திருமணம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 3-

தஞ்சை மாவட்டம், திருபுவனம் ஹாஜி எம்.ஐ. சாதிக் பாஷா - ஹாஜிமா எஸ்.சைரா பானு ஆகியோரின் புதல்வர் எஸ். ஹனீப் கானுக்கும், கழக தலைமை நிலையச் செயலாளர் ஹாஜி துறைமுகம் கே.காஜா - ஹாஜிமா கே.காத்தூன் பீவி ஆகியோரின் பேத்தி - ஜனாப் எஸ்.முஹம்மது ரபீக் - ஜனாபா எம்.ஜமீல் பாத்திமா ஆகியோரின் புதல்வி ஹாஜிமா எம்.சமீனா சப்ரியத்துக்கும் மணவிழா 5.7.2026 - ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் சென்னை திருவேற்காடு, ஜி.பி.என். பேலஸில் நடைபெறுகிறது.

இத்திருமணம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடைபெறுகிறது.

இத்திருமணத்தில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., ஆர்க்காடு நா.வீராசாமி, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி எம்.எல்.ஏ., க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ.இராசா எம்.பி., திருச்சி சிவா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், மு.பெ.சாமிநாதன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, பூச்சி எஸ்.முருகன், எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, ஆர்.பத்மநாபன், பொன் தனபால், அலிசேக் மீரான், செய்யது மீரான்,

கழக எம்.பி.க்கள் எஸ். ஜெகத்ரட்சகன், தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, பி.வில்சன், தமிழச்சி தங்கபாண்டியன், இரா.கிரிராஜன், அருண் நேரு, தங்க தமிழ்ச்செல்வன், டி.எம்.செல்வகணபதி, எஸ்.ஆர்.சிவலிங்கம், சு.கல்யாண சுந்தரம், கே.ஆர்.என். ராஜேஷ்குமார், டி.எம்.கதிர் ஆனந்த், கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், ச.முரசொலி, கே.இ.பிரகாஷ், த.செல்வம், எம்.எஸ்.தரணிவேந்தன், கணபதி பி. ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, ஆ.மணி, சி.என். அண்ணாதுரை, தே.மலையரசன், ராணி ஸ்ரீகுமார், ராஜாத்தி (எ) சல்மா உள்ளிட்ட மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள், மூத்த வழக்கறிஞர்கள், மேயர், துணை மேயர், மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நன்றி கூறுகிறார்.

### தி.மு.க. மாணவர் அணி போராட்டம் எதிரொலி:

# அமைச்சரிடம் விசாரிக்க த.வெ.க. குழு அமைப்பு!

## பதவி பறிபோகுமா? என அமைச்சர் அச்சம்!

சென்னை, ஜூலை 3-

த.வெ.க. அமைச்சர் சரத்குமாருக்கு எதிராக தி.மு.க. தொடர் போராட்டம் நடத்தியதால் அமைச்சர் சரத்குமாரிடம் விசாரிப்பதற்காக த.வெ.க. குழு அமைக்கப்பட்டுள்ளது.

குழுவின் அறிக்கை அடிப்படையில் அமைச்சர் பதவி பறிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

தி.மு.க.வின் தொடர் போராட்டத்தைத் தொடர்ந்து, அமைச்சர் சரத்குமாரின் பதவி பறிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில், போதைப் பொருள் பயன்படுத்தியது போல், “*Thug Life Story* போட்ட த.வெ.க அமைச்சர் சரத் குமாரை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மாணவரணி சார்பில் 29.6.2026 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அமைச்சர் சரத்குமாரை உடனடியாக பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்றும், போதைப்பொருள் பயன்படுத்தியது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்றும் தி.மு.க. மாணவரணி வலியுறுத்தியது.

இந்நிலையில், தி.மு.க.வின் போராட்டத்திற்கு பணிந்து, அமைச்சர் சரத்குமாரிடம் விசாரிப்பதற்காக த.வெ.க. குழு ஒன்றை அமைத்துள்ளது. குழுவினர் அளிக்கும் அறிக்கைப்படி மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சரின் பதவி பறிபோகலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

### நண்பரை மிரட்டும் அமைச்சரின் ஆதரவாளர்கள்!

இதற்கிடையே, த.வெ.க. அமைச்சர் போதைப்பொருள் பயன்படுத்திய வீடியோவை வெளியிட்டதாக சந்தேகப்பட்டு, அவரது ஆதரவாளர்கள் கத்தியுடன் வந்து மிரட்டுவதாக, அமைச்சர் சரத்குமாரின் பள்ளி நண்பர் சரண் ஜெயராமன் என்பவர் காவல் நிலையத்தில் பரபரப்பு புகார் அளித்துள்ளார். தனக்கும், தனது குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு வழங்கக் கோரி, தாம்பரம் துணை ஆணையரிடம் அவர் மனு அளித்துள்ளார்.